பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 17 திங்கட்கிழமை 05.12.2022 கதிர் 282

## நாடாளுமன்றம் வரமுடியாவிட்டாலும் அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன்

**பஸில் அறிவிப்பு; ரணிலுக்கும் பாராட்டு**

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற் றப்பட்டதன் மூலம் நாடாளுமன் றத்தில் அங்கம் வகிக்கும் தகைமை எனக்கு இல்லை. எனினும், அரசியலில் தொடர்ந் தும் இருப்பேன்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் (2)

# தேர்தல் நடத்துவதற்கு இதுவே உரிய தருணம்




## பஸில் அதிரடிக் கருத்து

இலங்கையில் தேர்தல் நடத்துவதற்கு இது பொருத்தமான நேரமாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப் பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். (2)

## இலங்கை மக்கள் எவரும் தேர்தலைக் கோரவில்லை

**அமைச்சர் அமரவீர தெரிவிப்பு**



இலங்கையில் மக்கள் எவரும் தேர்தலைக் கோரவில்லை. எதிர்க் கட்சியினரின் அவசரத்துக்காக முற்கூட்டியே தேர்தலை முடியாது. உரிய நேரத்தில் தேர்தல் நடத் தப்படும்.

இவ்வாறு அமைச்சர் (2)

## கிளிநொச்சியில் தடம்புரண்ட கொழும்பு – யாழ். சொகுசு பஸ்

**22 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்**





(ந.லோகதயாளன்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சொகுசு பஸ் கிளிநொச்சி, 155ஆம் கட்டைப் பகுதியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகி (2)

## கூட்டமைப்பின் அறிவிப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பு



மலையக மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதி நிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்துள்ளமையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்றுள்ளது.

தேசிய இனப்பிரச்சி னைக் கான தீர்வு தொடர்பில் (2)

## கிளிநொச்சி மாணவன் தலையில் படுகாயத்துடன் யாழ். வைத்தியசாலையில்

கிளிநொச்சியில் தனியார் கல்வி நிலையத்தில் 16 வயது மாணவனுக்கு குடிநீருடன் மது பானத்தை கலந்து ஏனைய மாணவர்கள் பருக்கியுள்ளனர். இதனால் நிலை தடுமாறி கீழே விழுந்த அவர் தலையில் படு காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நகருக்கு (8)

## பருத்தித்துறை நகர சபை 'பட்ஜட்' இன்று தோற்கடிப்பு

**கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் 'பல்டி'**




(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆளுகைக்குட் பட்ட பருத்தித்துறை நகர சபையின் வரவு – செல வுத் திட்டம் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. வாக்கெடுப்பின் போது கூட்டமைப்பு (2)

## நாட்டைவிட்டுத் தப்ப முயன்ற 20 பேர் திருமலையில் கைது



உள்ளூர் மீன்பிடிப் படகு மூலம் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல முயன்ற 20 பேரைக் திருகோணமலை கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படை யினர் கைது செய்துள் ளனர்.

திருகோணமலை, (8)

**அனைத்துக் கட்சிகளும் ஓரணியில்**

## பருத்தித்துறை பிரதேச சபையின் 'பட்ஜட்' ஏகமனதாக நிறைவேற்றம்



பருத்தித்துறை பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட்டம் இன்று ஏகமனதாக நிறைவேற் றப்பட்டது.

தமிழ்த் தேசியக் (2)

## கொடிகாமத்தில் வைத்தியரின் காரிலிருந்து ஹெரோய்ன் மீட்பு

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் மருத்துவர் என் பதைக் குறிக்கும் அடையாளம் பொறிக்கப்பட்ட காரிலிருந்து ஒரு கிராம் 30 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது என்று கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித் தார்.

சந்தேகத்தில் காரில் பயணித்த 26 மற்றும் 27 வயதான இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (8)

## பருத்தித்துறை பிரதேச ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு – செலவுத் திட் டக் கூட்டம் காலை 10:30 மணியளவில் தவிசாளர் அ.சா. அரியகுமார் தலை மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இன்றைய அமர்வில் கலந்துகொண்டதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஓர் உறுப்பினருமாக 20 பேரும் வரவு – செலவுத் திட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர்.

இதனால் வரவு – செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

21 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான எஸ்.தியாகலிங்கம் அண்மையில் காலமானதால் இன்றைய சபை அமர்வில் 20 உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட செய்தி எமது பிரதேசத்துக்கான அபிவிருத்தியில் சபை உறுப்பினர்கள் அனைவரினதும் ஒருமித்த பயணத்தை எடுத்துக்காட்டுகின்றது – என்று தவிசாளர் அ.சா. அரியகுமார் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

## தேர்தல் நடத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் இன்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த தேர்தல்களில் வெற்றி பெற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்த பஸில், மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாமல் போனதற்கும் மன்னிப்பும் கோரினார்.

எவ்வாறாயினும், பின்னடைவுகளை நிவர்த்தி செய்து, தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## பருத்தித்துறை நகர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஒருவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பக்கம் 'பல்டி' அடித்ததால் 'பட்ஜட்' தோற்கடிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டக் கூட்டம் இன்று (05) காலை 9:30 மணியளவில் நகரபிதா ஜோ. இருதயராஜா தலைமையில் நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வரவு – செலவுத் திட்டம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்த நிலையில் நகர சபை செயலாளரால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியமக்கள்முன்னணிஉறுப்பினர்கள் 6 பேரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 8பேர்பாதீட்டுக்குஎதிராகவாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 7 பேர் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் அடிப்படையில் வரவு – செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது என்று நகர சபை செயலாளர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தனக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மீளத் திருத்திய பாதீட்டைக் கொண்டுவரவிருப்பதாக அறிவித்து நகரபிதா கூட்டத்தை நிறைவு செய்தார்.

## நாடாளுமன்றம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

மீண்டும்நாடாளுமன்றம்பிரவேசிக்க முடியாமல் போனமைக்கு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிகளையும் பாராட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் இன்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இலங்கை மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த அமரவீர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலின் போது ஒவ்வொருவருடைய பலத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

தேர்தல் வேண்டும் என்று அடம்பிடிக்கும்எதிரணியினருக்குத்தேர்தலின் போது மக்கள் சிறந்த பதிலை வழங்குவார்கள் – என்றார்.

## கிளிநொச்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது. இன்று அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி – இரணைமடு அருகில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த 22 பேரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கூட்டமைப்பின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடன் பேச்சுக்குச் செல்வதற்கு முன்பாக, மலையகக் கட்சிகளையும் முஸ்லிம்கட்சிகளையும்தனித்தனியாகச் சந்தித்து பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகி வருகின்றது.

இந்நிலையில். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தொடர்பில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

மலையக மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாக பேச்சுக்களை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தமையை நாம் வரவேற்கின்றோம். இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக உள்ளது.

எனினும், அதற்கான அழைப்பு எமக்கும் இன்னும் விடுக்கப்படவில்லை – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தூக்கத்தில் தேர்தல் ஆணையம்

ஒரு ஜனநாயக நாட்டில் அந்த ஜனநாயகம் செழித்து ஓங்க வேண்டுமானால் அதற்கு முக்கியமானது தேர்தல். காலம் தவறாமல், மக்கள் கருத்தியலை வெளிப்படுத்தும் விதத்தில், நீதி, நேர்மையான முறையில் தேர்தல்கள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல்களை ஒழுங்காக நடத்தி, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு தேர்தல் ஆணையகத்திடம்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால்தான் அந்தத் தேர்தல் ஆணையத்துக்கு விசேட அதிகாரங்களும் சுயாதீனமாகச் செயற்படும் தனித்துவ உரித்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும், முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட – இப்போது பதவியில் இருக்கும் – தேர்தல்கள் ஆணையம் தனது சுயாதீன தனித்துவத்தையும், அதிகாரத்தையும் கையில் எடுத்துச் செயல்படுவதாக இல்லை.

இந்தத் தேர்தல் ஆணையகத்துக்கு தேர்தல் என்ற வகையில் நடத்துவதற்கு கிடைத்த முதல் சந்தர்ப்பம் இந்த உள்ளூராட்சி சபை தேர்தல்கள்தான். ஆனாலும் அது தொடர்பில் ஒரு முடிவு எடுக்க முடியாமல், இறப்பர் போல இழுபட்டுக் கொண்டு கிடக்கின்றது இந்த ஆணையம்.

தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் வரும் மார் 20ஆம் திகதியுடன் முடிவடைந்து விடும். அதற்கு முன்னர் புதிய உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, அவை பதவி ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். அந்தத்தேவைப்பாட்டைதேர்தல்ஆணையம்நிறைவு செய்ய வேண்டும் என சட்டம் எதிர் பார்க்கிறது.

மார்ச் 20 இல் இந்த தேர்தலை நடத்தி முடித்திருக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் அந்தத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்து, அதனை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இந்த அறிவிப்பை விடுப்பதற்கான அதிகாரம் இந்தத் தேர்தல் ஆணையத்துக்கு வந்து ஏற்கனவே இரண்டரை மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் தேர்தல் ஆணையமோ இக்காலகட்டத்தில் அந்த, இந்த சாக்குப் போக்குகளைச் சொல்லி தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

கடைசியாக, சட்டமா அதிபரின் கருத்துக் கேட்டல் என்ற சாக்குப் போக்கும் சொல்லப்பட்டது. தேர்தல் ஆணையம் தானே முடிவெடுத்து அறிவித்தால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தடை ஏதும் கிடையாது என்று சட்டமா அதிபரும் கோடி காட்டிவிட்டார்.

ஆனால் தேர்தல் ஆணையமோ தூங்குவது போன்று நடிக்கும் தனது பண்பியல்பிலிருந்து வெளிப்படுவதாக இல்லை. அதனால் அதைத் தட்டி எழுப்பியும் கூட தேர்தல் அறிவிப்பை விடுக்கச் செய்ய முடியுமோ தெரியவில்லை.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கான தேர்தல் எழுச்சி நாட்டில் எங்கும் இல்லை. அதற்கு காரணம் இந்த தூங்குமூஞ்சி தேர்தல் ஆணையம்தான்.

## அதானி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவுள்ளன இலங்கையின் துறைமுகங்கள்!

இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் இந்தியாவின் அதானி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படக்கூடும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைக்கு இந்தியாவின் கேரளம் மாநிலத்தில் உள்ள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகளை அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

அதன் மூலம் மின்சக்தி, எரிவாயு விநியோகம் மட்டுமன்றி 23.5 பில்லியன் ரூபா பெறுமதியான துறைமுக வழங்கல் நிலையமொன்றையும் அதானி நிறுவனம் பெற்றுக்கொள்ளவுள் ளது.

எனினும் விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் காரணமாக தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

அவர்கள் துறைமுக நிர்மாணப் பணிகள் நடைபெறும் இடத்தில் கொட்டில்கள் அமைத்து தங்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் அவர்களை அங்கிருந்து அகற்றுவதுடன், எதிர்வரும் நாள்களில் அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வோரை மத்திய ரிசர்வ் படையின் உதவியுடன் அடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கேரள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இலங்கையில் அதானி நிறுவனம் கால் பதிக்கும் என்றும் முக்கிய துறைமுகங்களை தன் வசப்படுத்திக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அந்தச் செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலங்குவதை சட்டத்தின்கீழ் பொலிஸாரால் ஐவர் கைது!

களுத்துறை – பண்டாரகம பிரதான வீதியில் சட்டவிரோதமான முறையில் பந்தயத்தில் ஈடுபட்ட ஐவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டனர் என மொரந்துடுவ பொலிஸார் தெரிவித்தனர். பந்தயத்துக்குப் பயன்படுத்தப்பட்ட ஐந்து மாடுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள் ளன.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய நேற்று காலை கோனதுவ பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களைக் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். எந்தவித அனுமதியுமின்றி பாதுகாப்பற்ற முறையில் இவர்கள் பிரதான வீதியில் பந்த யத்தில் ஈடுபட்டனர் எனப் பொலிஸார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பண்டாரகம மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் வசிக்கும் 25 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விலங்குவதை குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர்களைப் பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்!

சிவனொளிப்பாதம் அல்லது சிவனடிபாதம் அல்லது சிங்களவர்களால் ஸ்ரீபாத என்றழைக்கப்படும் புனிதத்தல யாத்திரை நாளைமறுதினம் (புதன்கிழமை), பூரணைத்தினத்தன்று ஆரம்பமாகிறது.

இது 2023 மே மாதம் பூரணை தினம் வரை நீடிக்கும்.

இதனை முன்னிட்டு, புனித திருமஞ்சனம், திருவுருவங்கள் மற்றும் சிலைகள் அடங்கிய வாகனப் பேரணி பெல்மடுல்ல கல்பொத்தவல ஸ்ரீபாத ரஜமஹா விஹாரையில் இருந்து நாளை (செவ்வாய்க்கிழமை) புறப்படவுள்ளது.

அன்று மாலை நல்லதண்ணியை வந்தடைந்து, உந்துவப் பூரணைத் தினத்தன்று அதிகாலை அங்கிருந்து ஊர்வலமாக சிவனொளிப்பாத மலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

மேலும் மூன்று ஊர்வலங்கள் எரத்ன, பலபத்கல மற்றும் பொகவந்தலாவ பாதைகள் ஊடாக வந்து ஹற்றன் பாதையில் இணையவுள்ளன.

இந்தநிலையில் யாத்திரையை முன்னிட்டு, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர்கள் பொலிஸார், பாதுகாப்பு தரப்பினர், அரச நிறுவனங்களின் உதவியுடன் யாத்திரிகர்களுக்கு வசதிகளையும் பாதுகாப்பையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபடுவோரைச் சந்தித்த ஜே.வி.பியினர்!






கிளிநொச்சி பூநகரி இலவங்குடா பகுதியில் வாழ்வாதாரத் தொழில்களுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி 66 நாள்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை ஜே. வி. பி. கட்சியினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட கிராஞ்சி இலவம்குடா கடற் பரப்பில் தங்களது வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி பிரதேசத்தை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சிறுகடல் தொழிலாளர்கள் 66 ஆவது நாளாகவும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப் பட்டு வருகின்ற போராட்டத்துக்கு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களை சந்தித்து ஜே.வி.பி. கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் சென்று அவர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# மிகப் பெரிய செமேரு எரிமலை இந்தோனேசியாவில் வெடித்தது

## குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை..!!





ஜகார்த்தா, டிச.05

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள லுமாஜாங் நகரில் அமைந்திருக்கின்ற அந்த நாட்டின் மிகப்பெரிய எரிமலையான – 12,060 அடி உயரம் கொண்ட – செமேரு எரிமலை நேற்று அதிகாலை திடீரென வெடித்து சிதறியுள்ளது. இதைத் தொடர்ந்து எரிமலையில் இருந்து வானுயுரத்துக்கு புகை மண்டலம் எழுந்தது. சாம்பல் புகையுடன் நெருப்பு குழம்பையும் எரிமலை கக்கி வருகின்றதாகக் கூறப்படுகின்றது.

இந்த எரிமலை வெடிப்பு அங்கு பெரும் அச்சத்தை கிளப்பியுள்ளது. இதை தொடர்ந்து எரிமலையில் இருந்து 5 கி.மீ தூரம் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும்படி அந்த நாட்டின் தேசியப்பேரிடர்மேலாண்மைஆணையம்அறிவுறுத்தியுள்ளதுடன், குறிப்பாக அங்குள்ள ஆறுகளில் எரிமலை குழம்புகள் மிதந்துவரும் வாய்ப்புகள் உள்ளதால், ஆற்றுப்படுகைகளிலிருந்து 500 மீட்டர் தள்ளியே இருக்கும்படி மக்கள்வ்அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், எரிமலைக்கு அருகில் சென்று புகைப்படம் அல்லது வீடியோ எடுப்பது போன்ற அபாயகரமான செயல்களில் ஈடுபட வேண்டாம் எனவும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், இதற்கு முன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் செமேரு எரிமலை வெடித்ததில் 51 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை மாணவர் 7பேருக்கு மியான்மாரில் மரணதண்டனை



நேபிடாவ், டிச.05

மியான்மரில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து நூறுக்கும் மேற்பட்டோருக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்து வருகின்றது. இராணுவ ஆட்சிக்கு எதிரானவர்களை ஒடுக்குவதற்கு மரண தண்டனையை ஓர் ஆயுதமாக மியான்மர் இராணுவம் பயன்படுத்துவதாக ஐ.நா. குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் மியான்மரில் பல்கலைக்கழக மாணவர்கள் ஏழு பேருக்கு அந்த நாட்டு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

வங்கியில் துப்பாக்கிச்சூடு நடத்தினர் எனக் குற்றம்சாட்டி அவர்களுக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நியாயமான விசாரணையின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறியும், சுதந்திரம் மற்றும் பாரபட்சமின்மைக்கான முக்கிய நீதித்துறை உத்தரவாதங்களுக்கு முரணான வகையிலும் இராணுவம்ஈரகசிய நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்கின்றன. மாணவர்களுக்கு மரண தண்டனை விதித்திருப்பது இராணுவத்தின் பழிவாங்கும் செயலாகும். எழு மாணவர்கள் தவிர்த்து, மேலும் நான்கு இளைஞர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்களுடன் சேர்த்து இதுவரை 139 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

## இஸ்ரேலுக்கு உளவுபார்த்த நால்வருக்கு ஈரானில் மரணதண்டனை நிறைவேற்றம்



டெஹ்ரான், டிச.05

மத்திய கிழக்கு நாடுகளான ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் நிலவி வருகிறது. ஈரானை தனது மிகப்பெரிய அச்சுறுத்தலாக கருதும் இஸ்ரேல் அந்த நாடு அணு ஆயுதங்கள் பெறுவதைத் தடுக்க போர் தொடுக்கவும் தயங்கமாட்டோம் என கூறி வருகிறது.

இந்நிலையில், ஈரானிலிருந்து இஸ்ரேலுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டில் நான்கு பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுளளதாகக் கூறப்படுகின்றது.

இஸ்ரேலின் மொசாட் என்கிற புலனாய்வு அமைப்பிற்காக பணியாற்றியதாக ஹொசைன் ஓர்துகான்சாதே, ஷாஹின் இமானி, மிலாட் அஷ்ரபி மற்றும் மனோச்சேர் ாபந்தி ஆகிய நான்கு பேரை ஈரானின் புரட்சிகர பொலிஸ் படை சமீபத்தில் கைது செய்திருந்தது.

இஸ்ரேல் உளவாளிகளான அந்த நான்கு பேரிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனவும், அவர்கள் மொசாட் அமைப்பிடம் இருந்து கிரிப்டோகரன்சி வடிவில் ஊதியம் பெற்றனர் எனவும் புரட்சிகர பொலிஸ் படை தெரிவித்துள்ளது. மேலும் அவர்கள் தனியார் மற்றும் பொது சொத்துகளை திருடினர் எனவும், தனிநபர்களைக் கடத்தி விசாரித்தனர் எனவும் குற்றம்சாட்டப்பட்டது.

இதையடுத்து அந்த நான்கு பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் நான்கு

பேருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி அவர்கள் நான்கு பேருக்கும் நேற்று மரண தண்டனை நிறை வேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## மசகு எண்ணை உற்பத்தி, விலையில் மாற்றம் இல்லை என்கின்றது ஒபெக்!




பிராங்பேர்ட், டிச.05

உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அந்த நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயின் விலையை பரலுக்கு 60 டொலராகக் குறைக்க ஐரோப்பிய கூட்டமைப்பும் மற்றும் 'ஜி–7' நாடுகள் முடிவு செய்துள்ளன.

இந்த விலைக் குறைப்பும், ஏற்கெனவே ரஷ்ய மசகு எண்ணெயை கடல்வழியாக ஏற்றுமதி செய்வது, அத்தகைய வாத்தகத்துக்கான காப்பீடு மேற்கொள்வது ஆகிவற்றுக்கு ஐரோப்பிய கூட்டமைப்பும் விதித்துள்ள தடையும் இன்று (திங்கட் கிழமை) முதல் அமுலுக்கு வருகின்றன.

இந்த நிலையில் சவுதி அரேபியா தலைமையிலான மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் அமைப்பான ஒபெக் அமைப்பின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த அமைப்பில் ரஷ் யாவும் உறுப்பினராக இருக்கும் சூழலில் மசகு எண்ணெயின் உற்பத்தியை குறைக்கக் கூட்டத்தில் முடிவு எடுக்கப் படலாம் என்றும், இதனால் சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை உயர லாம் என்றும் கருதப்பட்டது. ஆனால் மசகு எண்ணெய் உற்பத்தியில் எந்த மாற்ற மும் செய்வதில்லை எனவும், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தொடரவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# இந்தியா - இத்தாலி இடையில் நேரடி விமான சேவை ஆரம்பம்




புதுடெல்லி, டிச.05

இத்தாலி தலைநகர் ரோம் - புதுடெல்லி இடையே நேரடி விமான சேவையை இத்தாலியின் ஏர் டிரான்ஸ்போர்ட் (ஐடிஏ) விமான சேவை நிறுவனம், டிசம்பர் 3 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது. அதிக இந்தியப் பயணிகளை இத்தாலிக்கு அழைத்து வர வேண்டும் எனும் நோக்கில் இந்தப் புதிய சேவையை விமான நிறுவனம் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து இந்தியாவுக்கான இத்தாலிய தூதர் வின்சென்ட் டெலூகா கூறியதாவது, டெல்லி- ரோம் இடையே இத்தாலி ஏர் டிரான்ஸ்போர்ட் (ஐடிஏ) நிறுவனத்தின் நேரடி விமானம் இந்தியாவிற்கும் இத்தாலிக்கும் இடையிலான இணைப்பிற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கும். இரு நாடுகளுக்கும் இடையே ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை அதிகரித்து வருகிறோம். இது இத்தாலிக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பு உறவுகளை மேம்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஜி-20 மாநாடு தொடர்பாக இன்று அனைத்துக் கட்சிகளின் கூட்டம்




புதுடெல்லி, டிச.05

ஜி 20 கூட்டமைப்பின் தலைமை பொறுப்பு சுழற்சி முறையில் ஆண்டு தோறும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு வழங்கப்படுவது வழமை. அந்த வகையில் தலைமை பொறுப்பை

இந்தியா இப்போது ஏற்றுள்ளது. அதனையொட்டி நாடு முழுவதும் சுமார் 200 கூட்டங்களை

நடத்த இந்தியா தயாராகி வருகிறது.

ஜி 20 உச்சி மாநாடு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் அமெரிக்கா உள்ளிட்ட ஜி 20 கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும்

நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். ஜி20 உச்சி மாநாட்டுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின், மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி, ஆந்திர பிரதேச முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் ஆகியோரும் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும் அதிமுக இடைக்கால பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமிக்கும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. அவரும் கூட்டத்தில் பங்கேற்க இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## டெல்லியில் காற்று மாசு அபாய அளவை எட்டியது

புதுடெல்லி, டிச.05

டெல்லி முழுவதும் காற்றின் தரம் தொடர்ந்து 'மிகவும் மோசம்' என்ற நிலையை தாண்டி 'அபாய'அளவில் நீடிக்கிறது. நேற்றுக் காலை நிலைவரப்படி டெல்லியின் காற்றின் தரக் குறியீடு 407 என்ற அளவில் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காற்றின் தரக்குறியீடு மிகவும் மோசமான அளவில் இருப்பதால், அதிகாலை நேரங்களில் தலைநகரை சுற்றியுள்ள பகுதிகளில் வாகனங்களை இயக்குவதிலும், சுவாசிப்பதிலும் பெரும்சிக்கல் ஏற்பட்டு உள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனையடுத்து டெல்லியில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த காற்றின் தர மேலாண்மை ஆணையம் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அதன்படி, டெல்லியில் புதிய நாடாளுமன்ற கடடிடம் கட்டுமானப் பணி(சென்டிரல் விஸ்டா திட்டம்) மற்றும் தேசநலனுக்கான அத்தியாவசிய கட்டடப் பணிகள் தவிர்த்து பிற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.


அதேவேளையில், மெட்ரோ ரயில் சேவை பணிகள், விமான நிலையம் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பஸ் முனையங்கள் சார்ந்த கட்டுமான பணிகள், ரயில் சேவைகள் நிலையங்கள் சார்ந்த கட்டுமான பணிகள், தேசிய பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள், திட்டங்கள் சார்ந்த கட்டுமான பணிகள், மருத்துவமனைகள் கட்டுமான பணிகள், நெடுஞ் சாலைகள், சாலைகள், மேம் பாலம், மேல் பாலம், மின் பரிமாற்றம், குழாய்கள் கட்டுமான பணிகள், உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும்மருந்துகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியவற்றிற்கு இந்தத் தடை உத்தரவு பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் அனுப்பும் பணம் நடப்பாண்டில் கணிசமாக அதிகரிப்பு!

நியூயார்க், டிச.05

சிங்கப்பூர் மற்றும் பிற வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் சொந்தங்களுக்கு பணம் அனுப்புவது வழக்கமாக உள்ள நிலையில், வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள், நடப்பாண்டில் (2022இல்) மட்டும் இந்தியாவிற்கு அனுப்பியுள்ள பணம் பத்தாயிரம் கோடி(100 பில்லியன்) அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது

உலக வங்கி அறிக்கையின்படி, ஒரு நாடு வெளிநாடுகளில் பணிபுரியும் தங்கள் நாட்டு மக்களிடமிருந்து ஓராண்டில் மட்டும் இத்தகைய அதிக எண்ணிக்கையிலான பணப் பரிவர்த்தனையை எட்டுவது இதுவே முதல் முறையாகும். 2021ஆம் ஆண்டில் இந்தியா 89.4 பில்லியன் டொலர்களை பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) சுமார் 3 வீத பங்கு இந்த வருவாய் மூலம் உள்ளதுடன், வெளிநாடுகளில் அதிகரித்துள்ள ஊதிய உயர்வு மற்றும் அமெரிக்கா போன்ற பிற வளர்ந்த நாடுகளில் நிலவும் வலுவான தொழிலாளர் சந்தைகள் இதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது.




மேலும், சமீபத்திய ஆண்டுகளில், பல இந்தியர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற அதிக வருமானம் கொண்ட நாடுகளில் அதிக சம்பளம் கிடைக்கும் வேலைகளுக்கு மாறியுள்ளனர்.

உலகெங் கிலும் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தங் கள் தாய்நாட்டிற்கு அனுப்பும் பணத்தின் அளவு நடப்பாண்டில் 5 வீதம் அதிகரித்துள்ளது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில், குடும்ப வருமானத்திற்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பணம் ஒரு

முக்கிய ஆதாரமாக உள்ளது. இந்தியாவை தொடர்ந்து மெக்ஸிகோ, சீனா, எகிப்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் வெளிநாடுகளில் பணிபுரியும் தங்கள் நாட்டு மக்களிடமிருந்து அதிகளவு பணத்தை பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிங்களின் இருப்புக்கே சமஸ்டித் தீர்வால் பேராபத்து

## சீறுகிறது கிழக்கின் கேடயம் அமைப்பு




(நூருல் ஹுதா உமர்)

சிறுபான்மை முஸ்லிம்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் சமஷ்டி தீர்வுத்திட்டத்தை கிழக்கின் கேடயம் எதிர்க்கும். அதன் பாதகங்களை மக்கள் மயப்படுத்துவோம். வரவு – செலவு வாக்கெடுப்புக்கு பின் வருகின்ற சுதந்திர தினத்துக்கு முன்னர் சிறுபான்மை மக்களில் பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் என ஜனாதிபதி கூறியிருப்பதை வைத்து தமிழ்த்தரப்பு கட்சிகள் சமஷ்டி முறையிலான தீர்வுத்திட்டத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர் என கிழக்கின் கேடயம் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

இன்று அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் –

தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கவேண்டும் என்பது நியாயமானதே. ஆனால் முஸ்லிம் மக்களை நசுக்கத்துடிக்கும் சமஷ்டி முறைக்கு நாங்கள் ஒத்து ஊதுகுழல் ஊத முடியாது. அதிகாரப்பகிர்வு என்பது மத்திய அரசு அளவோடு பகிர்ந்தளிக்கும் அதிகாரங்களைத் தேவை ஏற்படின் நாடளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் சமஷ்டி என்பது மாநில அரசாங்கம் நினைத்தால் மாத்திரமே மத்திய அரசாங்கத்தினால் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அதாவது ஒருநாட்டுக்குள் தனிநாடு போன்றதாகும். அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்ட இணைந்திருந்த வடகிழக்கிற்குள் முஸ்லிம்களை நீங்கள் நசுக்கியதையும், எங்களுக்கு கழிவுகளை கொடுத்து கழிவிரக்கம் காட்டியதையும் நாங்கள் மறந்துவிடவில்லை. இதனால்தான் முஸ்லிம் கட்சிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நமக்கு தேவையான தீர்வுத்திட்டத்தினை வரைவதற்கும் எமது மக்கள் தொடர்பான பிரச்சினைகளை பட்டியலிட்டு தீர்வினை உருவாக்கவும் அழைப்பு விடுத்தோம். அவை செவிடன் காதில் ஊதிய சங்காகவே அரசியல் கட்சிளின் தலைவர்களுக்கு இருந்தன. மக்களும் அவ்வாறு இருந்துவிட முடியாது. ஏனென்றால் இது உங்கள் குழந்தைகளின் எதிர்காலமாகும். – என்றார்.

# காரைதீவு பிரதேச சபையின் பாதீடு ஏகமனதாக இன்று நிறைவேறியது!



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையின் ஐந்தாவது வரவு – செலவுத் திட்டம் (பாதீடு) இன்று திங்கட்கிழமை ஏக மனதாக நிறைவேறியது.

சபையின் 58 ஆவது மாதாந்த அமர்வு இன்று திங்கட்கிழமை சபையின் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்பது உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அடுத்த வருடத்திற்கான இந்த வரவு – செலவுத்திட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

அதன்படி ஏகமனதாக இந்த ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் நிறைவேறி இருக்கின்றது.

இன்றைய அமர்வில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்தபோது உப தவிசாளர் ஏ.எம்.ஜாகீர் மற்றும் உறுப்பினர்களான ஏ.எல். ஜலீல், கே.ஜெயதாசன் ஆகியோர் சமுகமளித்திருக்கவில்லை.

இன்றைய அமர்வில் காரைதீவு விபுலானந்தா தேசிய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்., மற்றும் அதிபர் ம.சுந்தரராஜன், ஆசிரியர் எஸ். இராஜேந்திரன் ஆகியோர் சமுகமளித்து சபை அமர்வைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. சபை அமர்வின் இறுதி நேரத்தில் உபதவிசாளர் ஜாகீர் சமுகளித்திருந்தார்.

காரைதீவு பிரதேச சபை வரலாற்றில் ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்து ஏகமனதாக நிறைவேறியமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்மாயில் மௌலானா குறித்து மருதமுனையில் நூல் வெளியீடு

(ஏ.எல்.எம்.ஷினாஸ், பி.எம்.எம்.ஏ.காதர்)

கிழக்கிலங்கையின் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஏ.ஜெ.எல்.வஸீல் தொகுத்து எழுதிய மருதமுனை வரலாற்றில் மூத்த கல்வியியலாளர் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.ஏ.எஸ் இஸ்மாயில் மௌலானா ஜே.பி. அவர்களின் கல்வி, சமய, சமூக பங்களிப்பு குறித்த நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மருதமுனையில் நடைபெற்றது.

மருதமுனை இஸ்லாமிய இலக்கியக் கழகம் ஏற்பாடு செய்த இந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு யாழ்ப்பாணம், வட மாகாணத்துக்கான குடியல் மேல் முறையிட்டு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் ரீ.எல்.ஏ. மனாப் தலைமை தாங்கினார்.

மருதமுனை அல்–மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அஷ்ரப் ஆராதனை மண்டபத்தில் "மர்ஹூம் கலாநிதி எஸ்.முகைதீன் பாவா அரங்கில் நடைபெபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்பு உரையை முன்னாள் நிருவாக உத்தியோகத்தர் கவிஞர் மருதமுனை ஹசன் நிகழ்த்த இவரது கல்விச் சேவை குறித்து ஓய்வு நிலை அதிபர் திலகம் ஏ.எல்.மீராமுகைதீன் உரையாற்றினார். முன்னாள் மேல் நீதிமன்ற ஆணையாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம். ஜெமீல், உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ், விரிவுரையாளர் அஷ்செய்க் எவ்.எம்.அன்ஸார் (நளீமி), அல்–மனார் தேசிய பாடசாலையின் தற்போதைய அதிபர் எம்.ஜெ.ஏ.ஹஸீப் ஆகியோர் இஸ்மாயில் மௌலானாவின் சேவைகள் மற்றும் அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொண்டனர்.

நூல் பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டதுடன் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.ஏ.எஸ்.இஸ்மாயில் மௌலானாவை பாராட்டி பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் பலரால் பொன்னாடை போர்த்தி பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் மூத்த கல்வியாளர்கள், துறை சார்ந்த அதிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புதையல் தோண்டிய ஆறு பேர் திருமலை அபயபுரவில் கைது!

## தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகத்தரும் சிக்கினாராம்

திருகோணமலை, அபயபுர பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் தொல் பொருள்திணைக்கள உத்தியோகத்தர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிராந்திய குற்ற தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அபயபுர–லெனின் மாவத்தையில் நேற்று முன்தினம் வீடொன்றில் புதையல் தோண்டி கொண்டிருந்த போது வீட்டு உரிமையாளர் உட்பட ஆறு பேரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கந்தளாய், காலி, நீர்கொழும்பு, அம்பாறை, தீகவாபி பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 28, 35 வயதுகளை உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்து சந்தேக நபர்கள் ஆறு பேரையும் திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# காரைதீவில் பாரம்பரிய கண்காட்சி













காரைதீவு பிரதேச செயலக ஒழுங்கமைப்பில் 'எமது பாரம்பரியமும் ஆரோக்கியமும்' என்ற கண்காட்சியும்விற்பனையும்நேற்றுஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஜெகராஜ தலைமையில் நடைபெற்றபோது, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும், மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிடுவதையும் காணலாம். (படங்கள்:–வி.ரி. சகாதேவராஜா).

# சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரத்தை வழங்கினால் எமது மாகாணங்களை நாம் அபிவிருத்தி செய்வோம்!



## சாணக்கியன் சவால்

சமஷ்டி கட்மைப்பில் அதிகாரத்தை வழங்கினால் எமது மாகாணங்களை நாங்கள் அபிவிருத்தி செய்வோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் நகரங்களைக் காண முடியாது. நகரங்கள் இருந்தால் தான் நகரங்களை அபிவிருத்தி செய்யலாம்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு மாத்திரம் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நகரங்கள் இல்லை.

நகர அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ஒருபகுதி கூட கிராமிய அபிவிருத்திக்கு ஒதுக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை, எழுவான் கரை ஆகிய பிரதேசங்கள் உள்ளன.

எழுவான்கரை பிரதேசத்தில் நகரங்கள் இல்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆளும் கட்சிகளுக்கு வாக்களித்தால் தான் அபிவிருத்தி செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதேச அபிவிருத்திக்கு இரு பிரதிநிதிகளையும், அரசியல் உரிமைக்காக இரு பிரதிநிதிகளையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

காணி அபகரிப்பு, அரசியல் கைதி விடுதலை, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் எமக்கு மக்கள் வழங்கிய பொறுப்பை முறையாக செயற்படுத்தி வருகிறோம்.

ஆனால் 2020 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஏனைய மாவட்டங்களில் அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றுள்ளன. அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்ட இரு பிரநிதிகளுக்கு செயற் திறன் இல்லையா என்பது தெரியவில்லை.

மட்டக்களப்பில் படுவான்கரையும், எழுவான் கரையையும் இணைக்கும் பட்டிருப்பு பாலம் எனது பாட்டனார் சி.மு.இராசமாணிக்கம் இருந்ந காலத்தில் இருந்ததைப் போன்று இன்றும் அதே நிலையில் தான் உள்ளது. கிராமங்களை நகரங்களாக மாற்றியமைக்க வேண்டுமாயின் கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மண்டூர் பிரதேசத்தில் இருந்து பிரதான நகரத்துக்கு வருவதற்கு பாலம் ஒன்று இல்லாத காரணத்தால் பெரும்பாலானோர் மண்டூர் பிரதேசத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள். அம்பலாந்துரை ஒரு நகரமாக்க வேண்டுமாயின் அங்கு ஒரு பாலம் நிர்மாணிக்கப்பட வேண்டும். ஆனால் அடிப்படை அபிவிருத்திகள் தற்போது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோட்டைக்கல்லாறு பகுதியில் உள்ள மக்கள் ஏ.டி.எம். சேவை வசதியை பல காலமாகக் கோருகிறார்கள். நகரமாக அபிவிருத்தி செய்ய முன் ஓர் ஏ.டி.எம்.சேவை வசதியை வழங்குங்கள்.

கோட்டைக்கல்லாறு பகுதிக்கு ஓர் ஏ.டி.எம் இயந்திரத்தைக் கூட கொண்டு வர முடியாத நிலையில் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு அபிவிருத்தி நாயகர்கள் உள்ளார்கள்.

செங்கடலடி சந்தை முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. மழை காலங்களில் இந்த சந்தைக்குள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு முழுமையாகச் சென்றடைவதில்லை. அமைச்சர் டக்லஸ் தேவானந்தா காலம் காலமாக அமைச்சராக பதவி வகிக்கிறார் மறுபுறம் அங்கஜன் இராமநாதன் பலமுறை இராஜாங்க அமைச்சுக்களை வகித்துள்ளார்.

தற்போது இருவர் இராஜாங்க அமைச்சு பதவிகளை வகிக்கிறார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் அபிவிருத்தியடையவில்லை.

இதன்காரணமாகவே அதிகாரத்தை வழங்குமாறு கோருகிறோம். சமஷ்டி கட்மைப்பில் அதிகாரத்தை வழங்கினால் எமது மாகாணங்களை நாங்கள் அபிவிருத்தி செய்வோம்.

பல ஆண்டுகாலமாக எமது மக்களின் முன்னேற்றத்துக்காக அதிகாரத்தை கோருகிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தியடைந்தால் அது நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுவானதாக அமையும். – எனக் குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

“இலங்கை வங்கியுடன் கலந்தாலோசித்து கோட்டைக் கல்லாறு பகுதிக்கு ஏ.டி.எம்.இயந்திய சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன்.’ – என்றார்.

மீண்டும் உரையாற்றிய சாணக்கியன்,‘மிக்க நன்றி. நாட்டின் நீதியமைச்சர் ஏ.டி.எம். இயந்திரத்தை பெற்றுக்கொடுப்பதாக குறிப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக பதவி வகித்த போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் அந்த அபிவிருத்தி பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் வாடகை வீடுகளிலும், வீடு இல்லாமலும் வாழ்கிறார்கள். ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை அரசியல் நோக்கமற்ற வகையில் நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு அபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமைகளில் புறக்கணிப்புக்கள் மாத்திரம் காணப்படுகின்றன. அரசியல் உரிமை ஊடாகவே அபிவிருத்தியை பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

அதிகார பகிர்வு தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தை போக்கும் செயற்திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். ஒருசில இனவாதிகள் அதிகார பகிர்வு தொடர்பில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்தார்கள்.

இலங்கை மேலவை கூட்டணி என்பதை அமைத்து தற்போது மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பிரதான நகரங்களின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காணும் திட்டம் எம்.சி.சி ஒப்பந்தத்தில் உள்வாங்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தை விமல் வீரவன்ச தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணியின் உறுப்பினர்கள் தான் இல்லாமலாக்கினார்கள். எம்.சி.சி தொடர்பில் தவறான நிலைப்பாட்டை இவர் கள் தான் தோற்றுவித்தார்கள். பிளவுபடாத இலங்கைக்குள் தான் அதிகாரத்தை கோருகிறோம்.

அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரங்களை வழங்குங்கள். தென்மாகாணத்திற்கு அதிகாரம் வேண்டாம் என்றால் அது உங்களின் பிரச்சினை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அபிவிருத்தியும், அரசியல் உரிமையும் இல்லாத நிலை காணப்படுகிறது. எமது உரிமைக்காக தொடர்ந்து போராடுகிறோம்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# தொழிலாளரை அச்சுறுத்துவதால் போராட்டத்தை நிறுத்த முடியாது!

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



ஹொரண பிளாண்டேன் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் போராட்டத்தை நிறுத்தலாம் என யாரும் நினைக்கவேண்டாம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஹொரண பிளாண்டேனில் பல்வேறு தவறுகள் இடம்பெற்று வந்தன, அதனை நாங்கள் பேசியும் நடவடிக்கை எடுக்காததால் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம்.

இது தொடர்பாக அடுத்த வாரம் பேச்சுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றது. பேச்சு வெற்றிபெற்றால் மாத்திரமே போராட்டத்தைக் கைவிடுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரச்சினை தொடர்பாகத் துரைமார்களுடன் கலந்துரையாட முற்பட்டபோதும் அவர்கள் அதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. ஆனால், தொழிற்சங்கப்போராட்டத்தை நிறுத்தாவிட்டால் பொலிஸில் முறைப்பாடு செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். – என ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பொலிஸாரிடமுள்ள குதிரைகள் திடீரெனச் சாவு

*இலங்கையில் பொலிஸ் குதிரைப்படை பிரிவுக்கு சொந்தமான அதிக பெறுமதியான 07 குதிரைகள் உணவுப் பற்றாக்குறையால் உயிரிழந்துள்ளன எனச் செய்திகள் வெளியாகியுள்ளது.*

*35 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான குதிரைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளன என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*எவ்வாறாயினும், இது தொடர்பில் ஆராய்ந்த போது கடந்த 3 மாதங்களில் மூன்று குதிரைகளே உயிரிழந்துள்ளன. இரண்டு குதிரைகள் சுகவீனம் காரணமாக உயிரிழந்தன என பிரிவு தெரிவித்துள்ளது.*

*எனினும், ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குதிரை ஒன்று உயிரிழந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.*

*இந்த குதிரைகளுக்கு வழங்கப்படும் சில தீவனங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளால் இலங்கைக்கு தீவனம் இறக்குமதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*எவ்வாறாயினும், உணவுப் பற்றாக்குறை இருந்தபோதிலும், குதிரைகள் மிகவும் வலுவான காலத்தை கடத்தியதாக பொலிஸ் குதிரைப்படை பிரிவு தெரிவித்துள்ளது.*

# 15 லட்சம் சுற்றுலாப் பயணிகளை அடுத்த ஆண்டு வரவழைக்க திட்டம்

அடுத்த ஆண்டில் இலங்கைக்கு குறைந்தபட்சம் 15 லட்சம் சுற்றுலா பயணிகளை வரவழைப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை அறிவித்துள்ளார். தற்போதைக்கு தென்னிலங்கையின் காலி உள்ளிட்ட பிரதேசங்களில் கூடுதலான சுற்றுலாத் தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. அதற்கு மேலதிகமாக வடக்கில் பாரிய பொழுதுபோக்குப் பூங்கா மற்றும் கிழக்கின் மட்டக்களப்பில் சுற்றுலா நகரம் ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறான திட்டங்களின் மூலம் அடுத்த ஆண்டில் குறைந்த பட்சம் 15 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

## கொடிகாமத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகாமம் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். இதன்போது, மருத்துவர் என்பதைக் குறிக்கும் அடையாளம் பொறிக்கப்பட்ட காரை மறித்து பொலிஸார் ஆவணங்களைப் பரிசோதித்த போது, காரிலிருந்தவர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸார் அவர்களைச் சோதனையிட்டனர்.

சாரதியிடமிருந்து 600 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னும், அவருடன் பயணித்தவரிடமிருந்து 430 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னும் மீட்கப்பட்டது.

காரின் சாரதியின் சகோதரர் மருத்துவர் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

இதேவேளை, இவர்களிடமிருந்து தலா அதிக கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்த போதும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அதனை மறுத்தார்.

மேலும், வழமையாக இவ்வாறான கைதுகள் இடம்பெற்றால் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கும் பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பில் எந்தத் தகவலையும் கசியவிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையாகவுள்ள தனியார் கல்வி நிலையத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கல்வி நிலையத்தில் காயமடைந்த மேற்படி மாணவனின் சக மாணவர்கள் போதைப் பழக்கமுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாணவன் எந்தவொரு போதைப்பொருள்களையும் பயன்படுத்துவதில்லை என்றும், கல்வியில் மிகச்சிறந்த பெறுபேற்றைப்பெறுபவன் என்றும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் குடிநீருடன் மதுபானத்தைக் கலந்து மாணவனைக் குடிக்குமாறு ஏனையோர் திணித்துள்ளனர்.

இதையடுத்து சைக்கிளில் செல்லும் போது மாணவன் வீதியில் விழுந்து தலையில் படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாகக் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாணவன் மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம், பொலிஸார் ஊடாக உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## நாட்டை விட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஃபவுல் முனைக்கு கிழக்கே உள்ள கடற்பரப்பில் இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 16 ஆண்களும், 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண்ணும், மூன்று வயதுக்குட்பட்ட 3 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, மூதூர், யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடல்வழிஊடாகமேற்கொள்ளப்படும் சட்டவிரோத குடியேற்ற முயற்சிகளைத் தடுப்பதற்காக, தீவின் கடல் மற்றும் கரையோரப் பகுதிகளில் வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாதுகாப்பற்ற கப்பல்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக குடியேற்ற முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று எச்சரித்துள்ள கடற்படையினர், அவ்வாறான கடற்பயணங்களில் ஈடுபடவேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2022 இல் வெளியிடப்பெற்றது.